கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
22, ராஜா முத்தையா சாலை, சென்னை-3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

.....

முன்னிலை : மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார் (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.

இருப்பிடம் : சென்னை-600 003.

.......

செயல்முறை ஆணை எண்.7635/2021/நிர்1 நாள் : 23.08.2022.

பொருள்: பணியமைப்பு - முன்னாள் படைவீரர் நலத்துறை - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் - திரு. வி. சகரியா ரூபன்ராஜ், த/பெ (கா/செ) திரு. நே. வின்சென்ட் (முன்னாள் பதிவுரு உதவியாளர்) - தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது - தொடர்பாக.

சுட்டு :

1. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை-3 அவர்களின் செயல்முறை ஆணை எண்.7635/2021/நிர்1, நாள்.07.09.2021.
2. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை-3 அவர்களின் கடித எண்.7635/2021/நிர்1, நாள்.22.12.2021.
3. அரசாணை (3ப) எண்: 7, பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் : 08.08.2022.

******

ஆணை :

சுட்டு (1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திரு. வி. சகரியா ரூபன்ராஜ், த/பெ (கா/செ) திரு. நே. வின்சென்ட் (முன்னாள் பதிவுரு உதவியாளர்) என்பவரை தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டதை தொடர்ந்து, 17.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

......2

உதவி இயக்குநர்
முன்னாள் படைவீரர் நலம்
திருப்பூர் - 641 604

திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. வி. சகரியா ரூபன்ராஜ், என்பவர் பணியில் சேர்ந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தி ஆணைகள் வழங்குமாறு சுட்டு (2)-ல் காணும் கடிதத்தின் மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டதில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து சுட்டு (3)-ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வரசாணையில் முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார் எனவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.13586/க்யூ-2/2022-1, நாள். 20.07.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 2842150/ஜி/2022, நாள். 26.07.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சுட்டு (3)-ல் காணும் அரசாணையின்படி, திரு. வி. சகரியா ரூபன்ராஜ், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணைகள் வழங்கப்படுகிறது.

திரு. வி. சகரியா ரூபன்ராஜ், என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, 17.09.2021 முற்பகல் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில், இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவ காலத்தில் தக்க வைக்கப்படுகிறார்.

தனியர், தகுதிகாண் பருவகாலத்தில் கீழ்க்கண்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்.
2. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சி.

..........3

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம், பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் பணிவரன்முறைப்படுத்தும் பதிவேட்டிலும் உரிய பதிவுகள் செய்திடுமாறு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் (பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இச்செயல்முறை ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிப்பு செய்தல் வேண்டும்.

(ஒம்)/– வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

<u>பெறுநர்</u>

திரு. வி. சகரியா ரூபன்ராஜ் – உதவி இயக்குநர் (பொ) மூலமாக.
இளநிலை உதவியாளர்,
முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–03.
2. <u>(பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்)</u> உதவி இயக்குநர் (பொ), முன்னாள் படைவீரர் நல அலுவலகம், திருப்பூர் மாவட்டம். — சுட்டு (3)–ல் குறிப்பிடப்பட்ட அசல் அரசாணை, திரு. வி. சகரியா ரூபன்ராஜ், இளநிலை உதவியாளரின் அசல் ஆவணம் (Anglo Indian School Leaving Certificate No. AIS 0011989) மற்றும் பணிப்பதிவேடு ஆகியன இச்செயல்முறை ஆணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. திரு. வி. சகரியா ரூபன்ராஜ், இளநிலை உதவியாளரிடம் அசல் ஆவணம் வழங்கி ஏற்பளிப்பு பெற்று இயக்ககத்திற்கு அனுப்பிவைக்குமாறு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் (பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.
3. மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர்.
4. நிர்வாகம் பிரிவு – 3.
5. முதன்மை ஆணைத் தொகுப்பு.
6. இருப்புக்கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

பணிவரன்முறை ஆணை அசல் மதிப்பெண் சான்றுடன் சேர்த்து ஒப்படைக்கப்பட்டது.

24/8

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

உதவி இயக்குநர் (பொ)
முன்னாள் படைவீரர் நலம்
திருப்பூர் - 641604

24/8/2022

சுருக்கம்

முன்னாள் படைவீரர் – பொதுத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. வி. சகரியா ரூபன்ராஜ், த/பெ (கா/செ) நே. வின்சென்ட் (முன்னாள் பதிவுரு உதவியாளர்) – தற்காலிக இளநிலை உதவியாளராக 17.09.2021 (முற்பகல்) அன்று பணி நியமனம் – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (முன்னாள் படைவீரர்)த் துறை**

**அரசாணை (3ப) எண். 7**

**நாள் : 08.08.2022.**
**சுபகிருது, ஆடி–23**
**திருவள்ளுவர் ஆண்டு – 2053**
**படிக்கப்பட்டது :**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–03 அவர்களின் கடித ந.க.எண்.7635/2021/நிர்1, நாள் :23.12.2021.

-----

**ஆணை :**

முன்னாள் படைவீரர் நல இயக்கக கூடுதல் இயக்குநர் அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திரு. வி. சகரியா ரூபன்ராஜ், த/பெ (கா/செ) நே. வின்சென்ட் (முன்னாள் பதிவுரு உதவியாளர்) என்பவர் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் 17.09.2021 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார் என்றும், பணி நியமனம் செய்யப்படும்போது அவரின் வயது 28 வருடங்கள் என்றும், அவர் பிறந்த தேதி 27.11.1993 என்றும், அவர் 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், திரு. வி. சகரியா ரூபன்ராஜ் அவர்களின் அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து அவர் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல் அப்பதவியில் பணி வரன்முறை செய்ய அரசின் ஆணையினை வழங்குமாறு வேண்டியுள்ளார்.

2. முன்னாள் படைவீரர் நல இயக்கக கூடுதல் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்தபின், திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. வி. சகரியா ரூபன்ராஜ், த/பெ (கா/செ) நே. வின்சென்ட் (முன்னாள் பதிவுரு உதவியாளர்) என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல்

**(த.பி.பா.)**

இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு வரன்முறை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண் 13586/க்யூ-2/2022-1, நாள்.20.07.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 2842150/ஜி/2022, நாள். 26.07.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

டி. ஜெகந்நாதன்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
சென்னை-3. (இணைப்புடன்).
திரு. வி. சகரியா ரூபன்ராஜ், இளநிலை உதவியாளர்,
முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,
திருப்பூர். (முன்னாள் படைவீரர் நல இயக்ககம் வழியாக)
மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர்.
தொழிலாளர் (ம) திறன் மேம்பாட்டு(க்யூ2)த் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மை (ஜி1)த் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி.

// ஆணைப்படி / அனுப்பப்பட்டது//

8/8/2022
பிரிவு அலுவலர்
8/8/2022